வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1982 /ஆ2/2026 நாள்: 21.08.2026

பொருள்: பள்ளிக்கல்வி –2022–2023 மற்றும் 2023–2024 ஆம் கல்வி ஆண்டிற்கான விளையாட்டு உபகரணங்கள் – பள்ளிகளுக்கு விநியோகம் செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கடிதம் ந.க.எண் 440 கொ.மு.2/2023, நாள் 25.05.2026.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 043268/எம்2/இ2/2025, நாள்: 01.07.2026.
3. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 1982/ஆ2/2026, நாள்: .06.2026.

------

பார்வையில் காணும் கடிதத்தின்படி 2022–23 மற்றும் 2023–24 ஆம் கல்வி ஆண்டிற்கான விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வேலூர் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது. பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் காட்பாடி, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இருப்பு வைக்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டு உபகரணங்களை சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் **காட்பாடி, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கீழ்காணும் அட்டவணையில் உள்ளபடி பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

| வ.எண் | வட்டாரத்தின் பெயர் | பெற்றுக் கொள்ள வேண்டிய தேதி |
|---|---|---|
| 1. | பேர்ணாம்பட்டு, குடியாத்தம்<br>அணைக்கட்டு, கணியம்பாடி. | 24.08.2026 |
| 2. | காட்பாடி, கே.வி.குப்பம்,<br>வேலூர் நகர், வேலூர் புறநகர். | 25.08.2026 |

பெறப்பட்ட உபகரணங்களை மாதிரி குழுக்கள் அமைத்து பின் பரிசோதனை செய்து ஆய்வு அறிக்கையை மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகத்தில் உடனடியாக ஒப்படைக்க சார்ந்த உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்களை பள்ளியில் இருப்பு பதிவேட்டில் (STOCK REGISTER) பதிவு செய்து, வழங்கல் பதிவேட்டின் மூலமாக மாணவர்களுக்கு வழங்கி முழுமையாக பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வரும் காலங்களில் ஆய்வு அலுவலர்கள் ஆய்வு செய்யும் பொழுது (STOCK REGISTER) மற்றும் விளையாட்டு உபகரணங்களை (பழுதடைந்த உபகரணங்கள் உட்பட) முன்னிலை படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**குறிப்பு:**

திரு.E.செல்லப்பா உ.க.இ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கே.வி.குப்பம்

திரு.த.தினகரன் உ.க.ஆ, திமு.கி.வா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காங்கேயநல்லூர்.

திருமதி.புவனா உ.க.ஆ அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி

மேற்காண் உடற்கல்வி இயக்குநர்கள்/ ஆசிரியர்கள் பொருட்களை சரிபார்த்து ஒப்படைக்க தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:** விளையாட்டு பொருட்களின் விவரப் பட்டியல்.

/ஒப்பம்/
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

**பெறுநர்**
தலைமையாசிரியர்கள்
அனைத்து அரசு உயர்நிலை /மேல்நிலைப் பள்ளி,
வேலூர் மாவட்டம்.
**நகல்**
வேலூர் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்
(தொடர் நடவடிக்கைகாக அனுப்பலாகிறது).